தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 22, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036

2005 ஏப்ரல் 4, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்துஇவ் வுலகு".

முறைசெய்தலாகிய தன்னுடைய கடமை கெடாமல், கண்ணோட்டம் செலுத்தும் வல்லமையுடைய அரசருக்கு, இந்த உலகமே உரிமையுடையதாகிறது.

1. இரங்கல் தீர்மானம்

போப்பாண்டவர் இரண்டாவது ஜான் பால் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: புனிதத் தந்தை போப்பாண்டவர் இரண்டாவது ஜான் பால் அவர்கள் 3–4–2005 அன்று மறைவுற்ற செய்தியைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அப்பெருந்தகையின் மறைவு குறித்து கீழ்க்காணும் இரங்கல் தீர்மானத்தைப் பேரவைமுன் வைக்கிறேன்.

"உலகின் கோடானுகோடி கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் மதத் தலைவராகவும், அருள் தொண்டராகவும், அன்பு, கருணை, அமைதி ஆகியவற்றின் மொத்த உருவமாகவும், புனிதத் தந்தை என்று அனைவராலும் அழைக்கப்படுபவருமான போப்பாண்டவர்

இரண்டாவது ஜான் பால் அவர்கள், தனது 84 ஆம் அகவையில் 3-4-2005 அன்று அதிகாலை வாடிகன் நகரில் மறைவுற்ற செய்தி அறிந்து, இம்மாமன்றம் தனது ஆழ்ந்த அதிர்ச்சியையும், ஆற்றொணாத் துயரத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

27 ஆண்டுகளாக போப்பாண்டவராகப் பதவி வகித்த அவர் அன்பையும், ஆன்மீகத்தையும் பரப்ப இந்தியா உட்பட 120 நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். உலகம் முழுவதும் அன்பையும், இரக்கத்தையும் பரப்புவதற்காக அவர் தன்னுடைய வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்தவர் ஆவார்.

அவருடைய மறைவினால் இவ்வுலகம் கருணை உள்ளம் கொண்டவரை இழந்து தவிக்கிறது. அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் வாடிகன் கத்தோலிக்கத் திருச்சபைக்கும், கோடானு கோடி கத்தோலிக்கக் கிறிஸ்தவ மக்களுக்கும் இம்மாமன்றம் தனது ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறது."

இத்தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த போப்பாண்டவர் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது.)

2. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள், வினா எண் 281, திருமதி சி.எம். சூரியகலா, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

281—

சிட்டா நூல் விற்பனை மையம்

***19187—திருமதி சி.எம். சூரியகலா:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS